**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2026.01.14 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2026 ஆம் ஆண்டு யனவரி மாதம் 14 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

02. கௌரவ பிரதேச சபை உப தலைவர் - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன
03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன
07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். வசந்த குமாரசிறி
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக்க குமார
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.கே. சுமேத லக்மால்
23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன
24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. வெரங்ஜா காமனி விஜேரத்தின
31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல
32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
33. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த
34. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. 2025.12.10 **பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல்.**

2025.12.10 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொது சபைக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டதாக கருதி திருத்தங்கள் இருப்பின் முன்வைப்பதற்கும், திருத்தங்கள் இல்லை என்றால் அவ் அறிக்கையை சபையில் நிறைவேற்றுவதற்கு கௌரவத் தலைவர் அவர்களினால் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கடந்த பொது சபை கூட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றிக்கொள்ளும் போது அதை வெறுப்புடன் நிராகரிப்பதாக கூறியதாகவும், வரவு வெலவுத் திட்ட வரைபை சபையில் நிறைவேற்றிக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் விசேட சபை கூட்டம் கூட்டப்பட்டு ஆலோசிக்கப்படும் என்று சபை கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை என்றும், அனைத்து திட்டங்களும் இந்த சபை கூட்டத் தொடருக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றும் இந்த திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்பது தங்களுக்கு தெரியாது என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்த அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், திருத்தங்களுக்கு உட்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்றும் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் முன்வைக்க முடியும் என்றும் கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தானும் கௌரவ பிரதேச சபை உபதலைவர் அவர்களும் இந்த திட்டங்களை எதிர்வரும் சபைக் கூட்டங்களின் போது முன்வைக்குமாறு கூறியதாகவும், அப்படி இருக்கையில் சுய விருப்பங்களுக்கு அமைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன என்றும், பிரதேச சபை தலைவருக்கு அனுபவங்கள் குறைவு என்பதால் இதுபோல் செய்து உள்ளதாகவும், இதனால் இந்த அறிக்கைகள் முன்வைக்கப்படவில்லை என்றும், PDF மாத்திரம் முன்வைக்கப்பட்டு உள்ளதால் இதை வாசிக்க நேரம் இல்லை என்றும், உங்களுக்க தேவை இருந்து இருந்தால் விசேட பொதுச் சபைக் கூட்டம் கூட்டி நிறைவேற்றி இருந்திருக்க முடியும் என்றும், திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் திட்டங்கள் நிறைவேற்றிக்கொள்வது அவசியம் என்றால் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஒன்றை கூட்டுவதற்கு இயலுமை காணப்பட்டதாகவும், வருங்காலங்களில் இது போல் செயல்கள் ஆற்றுவது உகந்தது என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்த அவர்கள் தெரிவித்தார்.

2025.12.10 சபைக் கூட்டத்தின் பிரேரணை இலக்கம் 20 இல் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் கருத்து தெரிவிக்கும் போது இந்த பிரச்சினை தொடர்பாக குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு முன்வைப்பது உகந்தது என்று தெரிவித்த கருத்து குறிப்பிடப்பட்டு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

2025.12.10 சபை கூட்ட அறிக்கையில் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணை இலக்கம் 01 இல் 50 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது 30 ஏக்கர் என்று திருத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கு அமைய **அத் திருத்தங்களுக்கு உட்பட்டு** 2025.12.10 ஆம் திகதி நடைபெற்ற பொது சபை கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். –**

பிரதேச சபை உறுப்பினர் கொடுப்பனவுகள் வழங்கும் போது சிக்கல்கள் ஏற்படுவதால் 2025.05.30 ஆம் திகதி இலக்கம் 2438/63 கொண்ட இலங்கை சனனாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிகளின் தொகுப்பில் சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்காமல் இருப்பதற்கான அனுமதியை பெறல் தொடர்பான பிரேரணை உள்ளடங்கிய 16 ஆம் விதியின் பிரகாரம் எவரேனும் உறுப்பினர் ஒருவர் சாதாரண சபைக் கூட்டத்திற்கு அல்லது விசேட சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் சபைக்கு லீவு கோரி இதற்கான எழுத்து மூலமன விண்ணப்பம் ஒன்றை தானாக, பிரதேச சபை தலைவருக்கு அல்லது வேறு எவரேனும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மூலம் முன்வைக்க வேண்டும். மேலும் 42(3) ஆம் பிரிவிற்கு ஏற்ப வைத்திய அறிக்கை ஒன்று ஒரு வாரத்திற்குள் முன்வைக்க வேண்டும்.

**03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை**

மருத்துவ காரணங்களுக்காக பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. மயுரி சத்துரிகா பரணமான்ன அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் அவர்கள் ஆமோதித்தார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். ஜெகன் மோகன் ஆகியோர் அன்றைய தினம் சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்காததால் அவர்களின் வீவுகள் அனுமதிக்கப்படவில்லை.

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :- இல்லை**

**05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை**

**06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்**

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. (1) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12 ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் ஏதெனும் பணிகளுக்கு அல்லது பிரதேச சபையின் கவணத்திற்கு உள்ளாகி காணப்படும் ஏதெனும் விடயம் ஒன்றிற்கு அல்லது உரிய விடயம் தொடர்பாக சபைக்கு ஆலோசனைகள் வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடக்கி பெல்மதுள்ள பிரதேச சபைக்கு கிடைக்கப்பெறும் வருமானங்கள் மற்றும் செலவுகள் பகுப்பாய்வு செய்தல், ஆலோசனைகள் வழங்கல், புதிய வருமானங்கள் ஈட்டும் நடவடிக்கைகளை இணங்காணல்

மற்றும் அவை தொடர்பான விதிகளை நடைமுறை படுத்தல் மற்றும் பிரதேச சபை மூலம் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 12 உறுப்பினர்கள் மற்றும் மூன்று வெளி உறுப்பினர்களையும் கொண்டதும் 25% பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதுமான நிதி மற்றும் கொள்கை குழு ஒன்றை நியமிப்பதற்கு பிரேரிக்கின்றேன். அச் செயற்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது பிரதேச சபையில் பிரேரணைகள் முன்வைத்து நிறைவேற்றிகொள்வதன் மூலம் நியமிக்க வேண்டும் என்றும் அச் செயற்பாட்டுக் குழுவானது ரூபா. 5 இலட்சம் வரையில் கொள்முதல் கமிட்டியாகவும் செயல்பட வேண்டும் என்றும் கௌரவ சபையிடம் பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், புதிய வருடம் ஒன்றிற்கு வரவுசெலவுத் திட்டம் ஒன்றை முன்வைப்பது வழக்கமான விடயம் என்றும், 2026 ஆம் ஆண்டிற்காக வரவுசெலவுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது என்பதை ஏற்க முடியாது என்றும், ஏனெனின் வரவுவெலவுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்கான சட்ட விதிகள், முறைகளுக்கு முரணாக செயற்பட்டு உள்ளது என்றும், 2020.03.10 ஆம் திகதியுடைய வரைபை ஆலோசிப்பதற்கு முறையான கடிதம் ஒன்று வழங்கப்பட்டு உள்ளது என்றும், அதன்போது வரைபை ஆலோசிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது என்றும், சபைக் கூட்டம் முடிவடைந்ததும் ஆலோசிப்பதாகவும் இருக்குமாறும் சபை கூட்ட அறிக்கையில் குறிப்படப்பட்டு உள்ளதாகவும், இதுபோல் சபை ஒன்றை நடாத்திச் செல்லும் முறை ஒன்று இல்லை என்றும், இன்றிலிருந்து செலுத்தப்படும் கொடுப்பனவுகள் எதுவும் சட்டரீதியானவை என்று கூறமாட்டேன் என்றும், இது தொடர்பாக கௌரவ ஆளுநர் அவர்களுக்கும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அவர்களுக்கும் முறையிட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக இதுவரை பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என்றும், இந்த மாதம் 31 ஆம் திகதிவரை காத்திருப்பதாகவும் அதன் பின்னர் நீதிமன்றத்திற்கு செல்வதாகவும், இந்த கொடுப்பனவுகள் தொடர்பாக அல்ல என்றும் முறையான வரவுசெலவுத் திட்டம் ஒன்றை முன்வைக்காமல் இந்த கொடுப்பனவுகள் கணக்காய்விற்கு உட்படும் என்று நம்புவதாகவும், வரவுசெலவ திட்ட வரைவு ஆலோசித்து முடிவடைந்து விட்டது என்று பொய்யான ஆவணம் ஒன்று தயாரித்து உள்ளது என்றும் எங்களில் எவரும் இது தொடர்பாக அறிந்து இருக்கவில்லை என்றும், இந்த சபையின் நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவுகளுக்கு எதிர்பு தெரிவித்து சபையில் இருந்த வெயியேறுவதாகவும் ஏனெனில் இது சட்டரீதியானது அல்ல என்பதால் பொறுப்பு ஏற்க முடியாது என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்து மு.ப. 10.25 இற்கு கௌரவ சபையில் இருந்து வெளியேறினார்.

கௌரவ சபையில் இருந்து வெளியேறிய பிரதேச சபை உறுப்பினர்கள்

1) கௌரவ பிரதேச சபை உபதலைவர் - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயந்தி சில்வா
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
8) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
9) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் -திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன
10) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
11) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி
12) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
13) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
14) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
15) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. வெரஙஜா காமனி விஜேரத்தின
16) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல
17) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர

கௌரவ சபையில் இருந்து வெளியேரிய கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் மீண்டும் சபைக்க வருகை தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் 30 நிமிடங்களுக்கு சபையின் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. (மு.ப. 10.27)

30 நிமிட காலம் கடந்த பின்னர் கௌரவ சபையின் உறுதியான உறுப்பினர் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு மு.ப. 10.55 இற்கு சபையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேரிய காரணத்தினால் நிதி மற்றும் கொள்கை குழுவிற்கான உறுப்பினர்களில் திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் நிதி மற்றும் கொள்கை குழுவிற்கு 07 உறுப்பினர்கள் மற்றும் 02 வெளி உறுப்பினர்கள் அடங்கலான செயற்பாட்டுக் குழுவை நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் வருங்காலத்தில் ஏதேனும் கமிட்டி திருத்தங்கள் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டால் அவற்றை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் நிதி மற்றும் கொள்கை குழுவிற்கு நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை தலைவர் - திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். தனேஸ் குமரன்
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த பிரேமகுமார
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர

வெளி உறுப்பினர்கள்

8) ஆசிரியர் - திரு. பிரேமரத்ன கொடிதுவக்கு
9) கணக்காய்வு உத்தரியோகத்தர் - திரு. ஜீ.ஏ. பிரபாத் தர்மரத்ன

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01 (1)**

பெல்மதுள்ள பிரதேச சபையின் நிதி மற்றும் கொள்கை செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வெளி உறுப்பினர்கள் நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை தலைவர் - திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். தனேஸ் குமரன்
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த பிரேமகுமார
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர

வெளி உறுப்பினர்கள்

8) ஆசிரியர் - திரு. பிரேமரத்ன கொடிதுவக்கு
9) கணக்காய்வு உத்தரியோகத்தர் - திரு. ஜீ.ஏ. பிரபாத் தர்மரத்ன

1.(ii) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12 ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் ஏதெனும் பணிகளுக்கு அல்லது பிரதேச சபையின் கவணத்திற்கு உள்ளாகி காணப்படும் ஏதெனும் விடயம் ஒன்றிற்கு அல்லது உரிய விடயம் தொடர்பாக சபைக்கு ஆலோசனைகள் வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடக்கி பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் பௌதீக மற்றும் பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவை தொடர்பான விதிகளை நடைமுறை படுத்தல் மற்றும் பிரதேச சபை மூலம் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 12 உறுப்பினர்கள் மற்றும் மூன்று வெளி உறுப்பினர்களையும் கொண்டதும் 25% பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதுமான தொழிநுட்ப சேவைகள் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் அச் செயற்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது பிரதேச சபையில் பிரேரணைகள் முன்வைத்து நிறைவேற்றிகொள்வதன் மூலம் நியமிக்க வேண்டும் என்றும் கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேரிய காரணத்தினால் தொழிநுட்ப சேவைகள் குழுவிற்கான உறுப்பினர்களில் திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் தொழிநுட்ப சேவைகள் குழுவிற்கு 07 உறுப்பினர்கள் மற்றும் 02 வெளி உறுப்பினர்கள் அடங்கலான செயற்பாட்டுக் குழுவை நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் தொழிநுட்ப சேவைகள் குழுவிற்கு நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.கே. சுமேத லக்மால்
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.பீ. சான்த குமார குடாவத்த

3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசந்த பிரேமகுமார
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக குமார
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். ஜெகன் மோகன்
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே.

வெளி உறுப்பினர்கள்

8) ஓய்வுபெற்ற பொறியியலாளர் - திரு. இரன்ஜித் கருணாதிலக
9) ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர் - திரு. ஹேமன்த தங்கஹதெனிய

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01 (ii)**

பெல்மதுள்ள பிரதேச சபையின் தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வெளி உறுப்பினர்கள் நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.கே. சுமேத லக்மால்
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.பீ. சான்த குமார குடாவத்த
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த பிரேமகுமார
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக குமார
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். ஜெகன் மோகன்
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே.

வெளி உறுப்பினர்கள்

8) ஓய்வுபெற்ற பொறியியலாளர் - திரு. இரன்ஜித் கருணாதிலக
9) ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர் - திரு. ஹேமன்த தங்கஹதெனிய

01.(iii) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12 ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் ஏதெனும் பணிகளுக்கு அல்லது பிரதேச சபையின் கவணத்திற்கு உள்ளாகி காணப்படும் ஏதெனும் விடயம் ஒன்றிற்கு அல்லது உரிய விடயம் தொடர்பாக சபைக்கு ஆலோசனைகள் வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடக்கி பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு பிரேரணைகள் பெற்றுக்கொள்ளல், முன்னுரிமை வழங்கல், பௌதீக திட்டங்கள், அத்துமீறிய நிர்மாணங்கள், முறையற்ற வீடமைப்புக்களை ஒழுங்குபடுத்தல், பொது மக்களின் சுப பயன்பாட்டு வசதிகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவை தொடர்பான விதிகளை நடைமுறை படுத்தல் மற்றும் பிரதேச சபை மூலம் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 12 உறுப்பினர்கள் மற்றும் மூன்று வெளி உறுப்பினர்களையும் கொண்டதும் 25% பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதுமான வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் அச் செயற்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது பிரதேச சபையில் பிரேரணைகள் முன்வைத்து நிறைவேற்றிகொள்வதன் மூலம் நியமிக்க வேண்டும் என்றும் கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேரிய காரணத்தினால் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவிற்கான உறுப்பினர்களில் திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவிற்கு 07 உறுப்பினர்கள் மற்றும் 02 வெளி உறுப்பினர்கள் அடங்கலான செயற்பாட்டுக் குழுவை நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவிற்கு நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால் ஜயரத்ன
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். ஜெகன் மோகன்
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த பிரேமகுமார
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர

வெளி உறுப்பினர்கள்

8) ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவை உதவியாளர் - திருமதி.ஆர்.எம். இரன்ஜனி சிறிசேன
9) ஓய்வுபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு. டப்.ஏ.கே. ஜயவர்தன

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 1 (iii)**

பெல்மதுள்ள பிரதேச சபையின் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வெளி உறுப்பினர்கள் நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால் ஜயரத்ன
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். ஜெகன் மோகன்
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த பிரேமகுமார
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர

வெளி உறுப்பினர்கள்

8) ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவை உதவியாளர் - திருமதி.ஆர்.எம். இரன்ஜனி சிறிசேன
9) ஓய்வுபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் - திரு. டப்.ஏ.கே. ஜயவர்தன

01.(iv) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12 ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரங்கள் செயற்பாடுகள் மற்றும் ஏதெனும் பணிகளுக்கு அல்லது பிரதேச சபையின் கவணத்திற்கு உள்ளாகி காணப்படும் ஏதெனும் விடயம் ஒன்றிற்கு அல்லது உரிய விடயம் தொடர்பாக சபைக்கு ஆலோசனைகள் வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடக்கி சூழல் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள், பசுமைத் திட்டங்கள், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அதாவது பெல்மதுள்ள, மாரபன பிரதேசங்களில் பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் திண்மக் கழிவு முகாமை நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவை தொடர்பான விதிகளை நடைமுறை படுத்தல் தொடர்பாக பிரதேச சபை மூலம் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 12 உறுப்பினர்கள் மற்றும் மூன்று வெளி உறுப்பினர்களையும் கொண்டதும் 25% பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதுமான சூழல் மற்றும் பொது வசதிகள் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் அச் செயற்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது பிரதேச சபையில் பிரேரணைகள் முன்வைத்து நிறைவேற்றிகொள்வதன் மூலம் நியமிக்க வேண்டும் என்றும் கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேரிய காரணத்தினால் சூழல் மற்றும் பொது வசதிகள் குழுவிற்கான உறுப்பினர்களில் திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் சூழல் மற்றும் பொது வசதிகள் குழுவிற்கு 07 உறுப்பினர்கள் மற்றும் 02 வெளி உறுப்பினர்கள் அடங்கலான செயற்பாட்டுக் குழுவை நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் சூழல் மற்றும் பொது வசதிகள் குழுவிற்கு நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். வசன்த குமாரசிறி
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால்
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர

வெளி உறுப்பினர்கள்

8) ஓய்வுபெற்ற ஆசிரியர் - திரு. எச். பஸ்நாயக்க
9) ஆசிரியர் - திரு. ஏ.வீ. லக்மால் தயாநந்த

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 1 (iv)**

பெல்மதுள்ள பிரதேச சபையின் சூழல் மற்றும் பொது வசதிகள் செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வெளி உறுப்பினர்கள் நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசாந்த
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். வசந்த குமாரசிறி
5) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
6) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால்
7) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர

வெளி உறுப்பினர்கள்

8) ஓய்வுபெற்ற ஆசிரியர் - திரு. எச். பஸ்நாயக்க
9) ஆசிரியர் - திரு. ஏ.வீ. லக்மால் தயாநந்த

01.(v) பெல்மதுள்ள பிரதேச சபையின் செயற்பாடுகள் மற்றும் பணிகள் ஆற்றும் போது அவற்றின் முன்னேற்றத்திற்காக பிரதேச சபைக்கு ஆலோசனைகள் வழங்கும் நடவடிக்கைகளுக்காக பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் மதகுருமார்கள், பிரமுகர்கள், நலன்புரி சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கிய ஆலோசனை செயற்பாட்டுக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் அச் செயற்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது பிரதேச சபையில் பிரேரணைகள் முன்வைத்து நிறைவேற்றிகொள்வதன் மூலம் நியமிக்க வேண்டும் என்றும் கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

அதன் அடிப்படையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் ஆலோசனை செயற்பாட்டுக் குழுவிற்கு நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.பீ. சாந்த குமார குடாவத்த
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார
5) - திரு. இரன்ஜித் கருணாதிலக
6) - திரு. என்டன்
7) - திரு. ரீ.கே.எஸ். சுரேஸ்
8) - திரு. பாலித கொதலாவல
9) ஆசிரியர் - திரு. நிசான்த லேகம்கே

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 1 (v)**

பெல்மதுள்ள பிரதேச சபையின் ஆலோசணை செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வெளி உறுப்பினர்கள் நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
2) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
3) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.பீ. சாந்த குமார குடாவத்த
4) கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார
5) - திரு. இரன்ஜித் கருணாதிலக
6) - திரு. என்டன்
7) - திரு. ரீ.கே.எஸ். சுரேஸ்
8) - திரு. பாலித கொதலாவல
9) ஆசிரியர் - திரு. நிசான்த லேகம்கே

02. 2026 ஆம் ஆண்டிற்காக கொள்முதல் கமிட்டியை நியமிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

கௌரவ தலைவர் - திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுர
செயலாளர் - திரு. ஆர்.கே. கபில ஜகத் குணதிலக
தொழிநுட்ப உத்தியோகத்தர் - திரு. பி.எம்.எஸ்.அயி. யோகரத்ன
- திரு. எச். ஜயசிங்க
பிரதேச சபை உறுப்பினர்கள் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
- திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார
- திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
- திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
- திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
- திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன

சபையில் இருந்து வெளியேரிய பிரதேச சபை உறுப்பினர்களின் பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டு இருப்பதால் அவர்களின் ஒப்புதல் பெற முடியாது என்பதால் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கும்

உறுப்பினர்களைக் கொண்ட கொள்முதல் கமிட்டியை நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் பிரேரிக்கப்பட்டது.

கௌரவ தலைவர் - திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுர<br>
செயலாளர் - திரு. ஆர்.கே. கபில ஜகத் குணதிலக<br>
தொழிநுட்ப உத்தியோகத்தர் - திரு. பி.எம்.எஸ்.அயி. யோகரத்ன<br>
- திரு. எச். ஜயசிங்க<br>
பிரதேச சபை உறுப்பினர்கள் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன<br>
- திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார<br>
- திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர<br>
- திரு. ஜீ.கே. சுமேத லக்மால்<br>
- திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 02**

பெல்மதுள்ள பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் கமிட்டி இற்காக கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கும் உறுப்பினர்களை நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

கௌரவ தலைவர் - திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுர<br>
செயலாளர் - திரு. ஆர்.கே. கபில ஜகத் குணதிலக<br>
தொழிநுட்ப உத்தியோகத்தர் - திரு. பி.எம்.எஸ்.அயி. யோகரத்ன<br>
- திரு. எச். ஜயசிங்க<br>
பிரதேச சபை உறுப்பினர்கள் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன<br>
- திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார<br>
- திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர<br>
- திரு. ஜீ.கே. சுமேத லக்மால்<br>
- திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே

03. 2025 ஆம் ஆண்டில் பிரதான அமைச்சு மூலமாக முற்பணங்கள் அனுமதி பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தேவாலெகம சிங்கப்புலிகந்த திரு. சஞ்ஜீவ அவர்களின் வீட்டின் அருகில் இருந்து தும்மலகஸ்தென்ன வரையிலான வீதியை கொங்கிறீட் இடும் திட்டத்திற்கு உரியதான பில்லுக்கு பெறப்பட்ட ரூபா. 1,674,450.00 தொகையை ஒப்பந்ததாரரான சன்னஸ்கம பொது நீர் வழங்கல் சங்கத்திற்கு தழுவ அனுமதியின் கீழ் செலுத்தப்பட்டது. அக் கொடுப்பனவு தொடர்பான அனுமதியை பெறுவதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 03**

தேவாலெகம சிங்கப்புலிகந்த திரு. சஞ்ஜீவ அவர்களின் வீட்டின் அருகில் இருந்து தும்மலகஸ்தென்ன வரையிலான வீதியை கொங்கிறீட் இடும் திட்டம் பூர்த்தி அடைந்த பில்லுக்கு ஏற்ப உரிய பில்லுக்கு ஏற்ப பிரதான அமைச்சு மூலமாக மீள்நிரப்பு செய்யப்பட்ட ரூபா. 1,674,450.00 தொகையை ஒப்பந்ததாரரான சன்னஸ்கம பொது நீர் வழங்கல் சங்கத்திற்கு செலுத்தப்பட்டது ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. பெல்மதுள்ள பிரதேச சபையின் மதிப்பீட்டு வரி இலக்கம் 11/1 உடைய கடை அறை இதற்கு முன் தனி அறை ஒன்றான இருந்தது. 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் அக் கடை அறை இரண்டு கடை அறைகளாக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அக் கடை அறை ஒன்றிற்கு நீர் மற்றும் மின்சார வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு நீர் மீற்றர் மற்றும் மின்சார மீற்றர் பெருத்துவது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 04**

பெல்மதுள்ள பிரதேச சபையின் மதிப்பீட்டு வரி இலக்கம் 11/1 உடைய கடை அறை இரண்டில் ஒரு கடை அறைக்கு முறையான நடைமுறை ஒன்றிற்கு ஏற்ப நீர் மற்றும் மின்சார வசதிகள்

பெற்றுக்கொள்வதற்கு நீர் மீற்றர் மற்றும் மின்சார மீற்றர் பொருத்துவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் இலக்கம் ii இன் கீழ் பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் முன்வைத்துள்ள பிரேரணைகள் அவர் சபையில் இல்லாத காரணத்தினால் அப் பிரேரணைகள் ஆலோசிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரேஸ் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. நாரங்கொடை பிரிவில் நிதங்கல போதிய வீதியில் மேல் பகுதி திரு. கமல் அவர்களின் வீட்டின் அருகில் இருந்து திரு. யாபா அவர்களின் வீட்டின் அருகில் உள்ள உடைந்து காணப்படும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 05**

இந்த பிரேரணையை பட்டியலிட்டு வைத்துக் கொள்வதற்கும், உரிய முற்பணங்கள் கிடைத்த பின்னர் இவ் அபிவிருத்தி திட்டத்தை மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. நாரங்கொடை பிரிவில் நாரங்கொடையும் குட்டாபிடிய பிரிவையும் இணைக்கும் சப்பாத்து பாலத்தில் கடந்த மழை நிலமை காரணமாக வெடிப்புக்கள் ஏற்பட்டு உள்ளன. அதிக மழை நாட்களில் இங்கெ போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுவதால் பிரதேச மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இதை நிரந்தர பாலம் ஒன்றாக அபிவிருத்தி செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 06**

இந்த பிரேரணையை பட்டியலிட்டு வைத்துக் கொள்வதற்கும், உரிய முற்பணங்கள் கிடைத்த பின்னர் இவ் அபிவிருத்தி திட்டத்தை மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. நாரங்கொடை பிரிவில் ஹெட்டிகந்த பாடசாலைக்கு அருகில் இருந்து நாரங்கொடை மேல் பிரிவு அதாவது நவதகஹமுல பிரிவிற்கு செல்லும் வீதியில் ஒரு இடத்தில் உள்ள வடிகால் குழாயை அபிவிருத்தி செய்து கொடுத்தல். இதற்கு ஊர் மக்களின் பணரீதியிலான பங்களிப்பின் ஊடாக ஓரளவு செய்து முடித்து உள்ளது. மேலும் அங்கே ஒரு பக்கத்திற்கு 02 அடி விட்டமுடைய மற்றும் 06 அடி நீளமுள்ள 03 சிலின்டர்கள் இட்டு பாதுகாப்பு மதில் இடுவது எஞ்சியுள்ளது. அதை அபிவிருத்தி செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07**

களப் பரிசோதனை செய்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய முற்பண நிலமைகளை கருத்தில் கொண்ட 03 சிலின்டர்கள் வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. எமது தொகுதி உட்பட ஏனைய தொகுதிகளிலும் சுயதொழிலில் ஈடுபடும் சிறு அளவிலான உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வார சந்தை நடைபெறாத தினங்களை அவர்களுக்கு ஒதுக்கி அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டம் என்று பிரேரிக்கின்றேன். (இதனால் பிரதேச சபைக்கு சிறு ஆதாயம் கிடைக்கும்)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், வார சந்தை வளாகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து விலங்குகள் உள்வரும் இடங்களை இல்லாமல் செய்து, பகல் பொழுதில் மற்றம் இரவு பொழுதில்

சிறுவர்களுக்கு விளையாடுவதற்கு உகந்த இடம் ஒன்றையும், பல்வேறு வகையான உணவுகளை பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற இடம் ஒன்றையும், காலை பொழுதில் கிராமிய உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கும், இரவு நேரங்களில் விநோத வளாகம் உருவாக்கல் உணவு வகைகள் விற்பனை செய்தல் உடன் பொது மக்களுக்கு இரசனைகள் பெற்றுக்கொள்ள முடியுமான முறை ஒன்றை தயாரிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 08**

வார சந்தை வளாகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பின்னர் இந்த பிரேரணை தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றை தயாரித்து அந்த முறைக்கு ஏற்ப இந்த விடயங்களை மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

05. குட்டபிட்டிய தொகுதியில் வசிக்கும் தமிழ் மக்களின் தோட்ட பிரிவில் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபை ஒன்றினைந்து சுத்திகரிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், தோட்டப் புறங்கள் அசுத்தமாக காணப்படுவது அங்கு ஊழியர் இல்லாமை மற்றும் பணம் இல்லாமை என்பனவற்றால் அல்ல என்றும் மக்களின் அணுகுமுறைகளிவ் உள்ள குறைபாடுகளினால் ஆகும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், ஊரில் குப்பை போடுவதற்கு இடம் ஒன்று இல்லாத வீடுகள் காணப்படுவதாகவும், தோட்ட முகாமையாளருடன் கதைத்து தோட்ட திறக்கடரை பெற்று பிரதேச சபை ஊழியர்கள், ஊர் மக்களின் பங்களிப்புடன் இந்த தோட்டப் பிரிவை சுத்தம் செய்வதற்கும், நீலகம் இலக்கம் 05 பாடசாலைக்கு அருகில் மயானபூமிக்கு அருகில் குப்பைகள் போடுவதாகவும், குப்பை போடும் மக்கள் மீது பழி போடுவது பிரயோசனம் அற்ற விடயம் என்றும் ஏனெனின் அவர்களுக்கு குப்பைகளை அகற்றுவதற்கு இடம் இல்லை என்றும், குப்பை திறக்டர் முன்பு இந்த வீதியில் சென்றதாகவும், தற்போது குப்பை திறக்டர் இந்த வீதியில் செல்வது இல்லை என்றும், மாதத்திற்கு இரண்டு முறை குப்பை திறக்டர் நீலகம் இலக்கம் 05 பிரிவிற்கு அனுப்புமாறும், உக்கும், உக்காத குப்பைகளை வேறாக்குவதற்கு மக்களை தெளிவுபடுத்த வேண்டும் என்றும், ஆரம்ப நிகழ்வாக நீலகம் இலக்கம் 05 பிரிவில் சிரமதானப் பணி ஒன்றை மேற்கொண்டு அன்றைய தினம் பொதுமக்கள், பிரதேச சபை, பொது சுகாதார பரிசோதகர் ஒன்றினைந்து சுத்தம் செய்வது உகந்தது என்று கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்கள் தெரிவித்தார். மேலும் குப்பை முகாமை நடவடிக்கைகளுக்கு பொறுப்பான விடய உத்தியோகத்தருக்கு நீலகம் இலக்கம் 05 பிரிவிற்கு குப்பை திறக்டரை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரியப்படுத்துமாறு கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின அவர்கள் மு.ப. 11.20 இற்கு கௌரவ சபையில் இருந்து வெளியேறினார்.

கருத்து தெரிவிக்கையில், தோட்டப் புறங்களில் வாழும் மக்கள் தமது சுற்றுச்சூழலை அதாவது முற்றம், வடிகால் தொகுதி என்பவற்றை கட்டிடம் அமைத்து அழகாக வைத்திருப்பதற்கு விருப்பம் உடையவர்கள் என்றும் ஈனால் இவற்றை செய்வதற்கு தோட்டம் இடம் கொடுக்காத நிலை காணப்படுவதாகவும், இதை செய்வதற்கு தோட்டம் அனுமதி கொடுக்காவிட்டால் இந்த வசதிகளை தோட்டம் ஆற்ற வேண்டும் என்றும், இது தொடர்பாக தோட்ட முகாமையாளருடன் கலந்தாலோசித்து முடிவொன்று எடுக்கப்பட வேண்டும் என்றும், மேலும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக கூரை தகடுகள் வழங்கும் வேலைத்திட்டம் நடைபெறுவதால் விரைவாக பெல்மதுள்ள பிரதேசத்திற்கு பெற்றுக்கொடுப்பது விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கொரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தோட்டப் புறங்களில் வாழும் மக்களுக்கு காணி உரிமை இல்லை என்றும், காணி உரித்துள்ள தோட்ட முகாமைகள் தோட்ட மக்களிக் பூதவுடல்களை புதைப்பதற்கு இடம் கொடுப்பது இல்லை என்றும், இதனால் தோட்ட கம்பணிகள் சிலவற்றுடன் பேசியதாகவும் தோட்ட கம்பணிகளில் வழக்குகள் காணப்படுவதால், பொருந்தோட்ட அமைச்சர், வழக்கின் கட்சிக்காரர்கள் நாங்கள் ஒன்று சேர்ந்து இது தொடர்பாக ஆழமாக கலந்தாலோசித்ததாகவும் அந்த வழக்கின் நடைமுறைக்கு பாதிப்புக்கள் ஏற்படாத விதத்தில் நாளாந்த நடவடிக்கைகள் நடாத்திச் செல்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்கு இயலுமா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கும், அதை விரைவுபடுத்துவதற்கும் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் பிரதேச சபை என்ற ரீதியில் நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கி அமைச்சிற்கு சென்று நேரடியாக கலந்தாலோசிப்பதாக கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 09**

குட்டபிட்டிய தொருதியில் தமிழ் மக்கள் வசிக்கும் தோட்டப் பிரிவில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிரதேச சபை ஒன்றினைந்து சுத்தம் செய்வதற்கும் குப்பை முகாமை தொடர்பாக அனைத்து தொகுதிகளிலும் தமிழ் மக்களை தெளிவு படுத்துவதற்கு தொகுதி மட்டத்தில் நடாத்துவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியானி வீரசேகர அவர்களின் பிரேரணைகள்**

01. 171B கொடகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் பாதகட துபதெனிய ஊடாக கொடகம தெனவகவத்த மற்றும் பண்டாரவத்தவிற்கு பிரவேசிக்கும் வீதியில் திரு. சானக அவர்களின் வீட்டின் அருகில் கல் அமுனவிற்கு குறுக்காக போடப்பட்டு இருக்கும் வடிகால் குழாய் உடன் கூடிய வீதியின் பகுதி 2025.12.08 ஆம் திகதி அதிக மழை வீழ்ச்சி காரணமாக புதையுன்டு வீதி உடைந்து அவதானமான நிலை காணப்படகிறது. ஊர் மக்கள் தங்கள் உழைப்பை வழங்க தயாரா உள்ளனர். அதை திருத்துவதற்கு தேவையான பொருட்களான சீமேந்து, கல், மணல், வடிகால் குழாய்கள் பெற்றுக்கொடுத்து விரைவாக திருத்துவதற்கு பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், நிதி தேவை இல்லை என்றும் பொருட்கள் மட்டும் பெற்றுத் தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியானி வீரசேகர அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 10**

இந்த அபிவிருத்தி பணிக்கு நிதி வழங்க முடியாது என்றும், களப் பரிசோதனை செய்து பெறப்படும் பரிந்துரைகள் மற்றும் மதிப்பீடு மற்றும் முற்பண நிலைகளை கருத்தில் கொண்டு வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**v. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணைகள்**

01. இலக்கம் 02 பிரிவில் காலணி மேல் பிரிவிற்கு பிரவேசிக்கும் வீதியின் ஆரம்ப பகுதியில் உள்ள மாணிக்க மண்ணை ஏலத்தில் விடுதல் உகந்தது என்று தொழிநுட்ப சேவைகள் கமிட்டி பரிந்துரை செய்துள்ளதால் அதற்காக உகந்த முடிவு ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 11**

தொழிநுட்ப சேவைகள் கமிட்டியின் பரிந்துரை தொடர்பாக கௌரவ ஆளுநர் அவர்களின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதற்கும், பெறப்படும் பரிந்தரைகளுக்கு ஏற்ப வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் மு.ப. 11.45 இற்கு கௌரவ சபையில் இருந்து வெளியேறினார்.

02. மொரதொட இசுரு மாவத்தையில் திரு. நிலமே அவர்களின் வீட்டின் அருகில் உள்ள வடிகால் குழாயை அகற்றி சிறிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பது அவசியம் என்பதால் அந்த இடத்தில் இருக்கும் மாணிக்க மண்ணை பொது ஏலத்தில் விடுவது உகந்தது என்று தொழிநுட்ப சேவைகள் கமிட்டி பரிந்துரை செய்துள்ளதால் அதற்காக உகந்த முடிவு ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

தொழிநுட்ப சேவைகள் கமிட்டியின் பரிந்துரை தொடர்பாக கௌரவ ஆளுநர் அவர்களின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதற்கும், பெறப்படும் பரிந்தரைகளுக்கு ஏற்ப வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. 2025.01.29 ஆம் திகதி தொழிநுட்ப சேவைகள் கமிட்டியின் பரிந்துரை இலக்கம் 04 இற்கு அமைய RW 9999 தண்ணீர் பவுசர் மற்றும் RV 5835 டேலரை பழுதுபார்ப்பது தொடர்பாக இயந்திர பொரியியலாளர் , இது வினைத்திறன் அற்ற செயல் என்று பரிந்துரைத்து உள்ளதால் அதற்காக உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

பொருள் பகுப்பாய்வின் போது RW 9999 தண்ணீர் பவுசர் மற்றும் RV 5835 டேலர் என்பன கழிவுப் பொருட்களாக ஒதுக்கப்பட்டதன் பின்னர் இயந்திர பொரியியலாளர் மூலம் மதிப்பீடு ஒன்றை பெற்று RW 9999 தண்ணீர் பவுசர் மற்றும் RV 5835 டேலர் ஆகியவற்றை பொது ஏலத்தில் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.ஜீ. சந்திரலால் ஜயரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. மாவுதெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வே ஆற்றிற்கு குறுக்காக போடப்பட்டிருந்த பனகம பாலம் 2003 ஆம் ஆண்டு வெள்ளத்திற்கு கழன்று அது 04 அடி அகலம் கொண்ட சிறிய பாலம் ஒன்று, அத்துடன் அது ஆற்றில் அழிந்து கொண்டு இருக்கிறது. அந்த பாலத்தை வெளியில் எடுத்து ஒரு பகுதியை பனகம தெதொல வீதியில் மேல் கிரிவெல் கெடிய நீர் ஓடைக்கு குறுக்காக போகும் ஒற்றையடிப் பாதைக்கு பொருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

களப் பரிசோதனை மேற்கொண்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. கல் இன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிரிவெல்தெனிய விஹாரைக்கு செல்லும் குறுக்கு வீதிக்கு குறுக்காக தண்ணீர் வடிந்து செல்வதற்கு பொடப்பட்டு இருக்கும் வடிகால் குழாய்களின் அளவு சிறியது என்பதால் அதிக மழை நாட்களில் வீதியில் தண்ணீர் நிறைவதால் பெரிய வடிகால் குழாய்கள் இட்டு வடிகால் தொகுதியை சுத்தம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

தொகுதிகளில் காணப்படும் வடிகால் குழாய்களின் தேவைகளை இணங்கண்டு தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையுடன் பட்டியல் ஒன்றை வழங்குவதன் மூலம் ஓரேமுறை வடிகால் குழாய்கள் கொள்வனவு செய்வதற்கு முடியும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 15**

களப் பரிசோதனை செய்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய முற்பண நிலமைகளை கருத்தில் கொண்டு வடிகால் குழாய்கள் வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. மாவுதெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் பனகம சந்தியில் கீழுக்கு உள்ள வீதியில் 02 வளைவுகளுக்கு 03 அடிகள் அகலத்திற்கு கொங்கிறீட் இட்டு அகலப்படுத்தவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 16**

களப் பரிசோதனை மேற்கொண்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. வார சந்தை வளாகத்தில் ஒவ்வொரு மாதமும் 04 நாட்கள் அல்லது 03 நாட்கள் வீதி உணவு வகைகள் விற்பனை நிலையங்களை நடத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 17**

வார சந்தை வளாகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பின்னர் இந்த பிரேரணை தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றை தயாரித்து அந்த முறைக்கு ஏற்ப இந்த விடயங்களை மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

02. குப்பை முகாமை நடவடிக்கைகள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் தொடர்புகளை ஏற்படுத்தி தருமாறு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கிராம மட்டங்களில் பொது மக்கள் குப்பைகளை வேறாக்கல் தொடர்பாக தெளிவுகள் பெறப்பட்டு இல்லை என்றும், அந்த பொது மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் கிராம மட்டங்களில், கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில், தொகுதி மட்டங்களில் பொது மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்வதற்கு முடியுமானால் அதற்கான காலம், உழைப்பு பங்களிப்பை வழங்க முடியும் என்றும், அவ்வாறு தெளிவுபடுத்தல்கள் மேற்கொண்ட பின்னர் குப்பை முகாமை செய்தல் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்வதற்கும் தெளிவுபடுத்தல்கள் இன்றி இதை செய்ய முடியாது என்றும், தமது தொகுதிகளில் மக்களின் பங்களிப்பை பெற்றுத் தருமாறும் நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கித் தருமாறும், இந்த சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வதாகவும், தேலைப்படவது இருப்பதற்கு ஒரு இடம் மட்டும் ஆகும் என்றும், தேவையான தொழிநுட்ப உபகரணங்கள், அறிவை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும், தெளிவுபடுத்துவதற்கு ஒரு மணித்தியாலம் வரை நேரம் தேவைப்படுவதாகவும், 06 டொன் அளவிலான குப்பைகளை 04 டொன் வரை குறைப்பது இலக்கு என்றும், இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மக்களை தெளிவுபடுத்துவதற்கு தேவையான அடிப்படை உதவிகளை பெற்றுத் தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், 2026 ஆம் ஆண்டானது குப்பை முகாமை ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்றும், 2025 ஆம் ஆண்டில் சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இது தொடர்பாக நேர்மறையாக ஏதேனும் செய்ய இயலாது என்றும், இந்த விடயம் தொடர்பாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கயான் புஸ்பகுமார அவர்களுக்கு தெளிவுகள் உள்ளன என்றும் ஏனைய விடயங்களில் இருந்து ஒதுக்கி குப்பை முகாமை என்ற விடயத்தை மாத்திரம் மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்த கௌரவ சபையின் உறுப்பினர்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழும் இளைஞர் யுவதிகள், 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள், பெண்கள் ஆகியோரை ஒன்றினைத்து குப்பை பற்று புதிய சொற்பொழிவுகள் உருவாக்க வேண்டும் என்றும், திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும் என்றும், முதலாம் கட்டமாக கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றிற்கு சென்று உதாரணமாக குப்பை முகாமை செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்வது உகந்தது என்றும், பிரதேச சபையின் முழு பலத்தை இதற்கு ஈடுபடுத்துவதாகவும், பிரதேச சபையின் ஊழியர்கள், உறுப்பினர்கள், பிரதேச வாழ் மக்களை சம்பந்தப் படுத்தி உதாரண குப்பை முகாமை கிராமம் ஒன்றை நிர்மாணிப்பது முதலில் செய்ய வேண்டும் என்றும், பெப்ரவரி மாதத்திற்கான குறித்த செயற்திட்டமாக இதை மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மானிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 18**

சூழல் மற்றும் பொது வசதிகள் கமிட்டி மூலம் ஆலோசிக்கப்பட்டு குப்பை முகாமை தொடர்பாக தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்வதற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் முறையான திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும், ஆரம்ப கட்ட நடவடிக்கையாக கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றை தேர்ந்தெடுத்து பிரதேச சபையின் ஊழியர்கள், வேறு அரச நிறுவனங்களின் ஊழியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச வாழ் மக்களின் பங்களிப்புடன் குப்பை முகாமை பற்றி தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
நிகழ்ச்சி நிரலில் இலக்கம் viii, ix, x, xi, xii, xiii இன் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள் கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் சபையில் இல்லாததன் காரணத்தினால் அப் பிரேரணைகள் கலந்தாலோசிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

01. பிரதான அமைச்சின் நிதியில் இருந்து தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்திக் கீழ் 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சேபாலிகா கடை அருகில் இருந்து லயன் அறைக்கு பின்னால் உள்ள வீதியை அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு உரிய ரூபா. 1,566,616.41 தொகையை ஒப்பந்தக்காரரான வெல்அதுராகொடை, கனேகம, பெல்மதுள்ள அதுராகொடை எக்சத் அவமங்கல்யதார சஹன சேவா சங்கத்திற்கு வழங்குவதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

பிரதான அமைச்சின் நிதியில் இருந்து தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்திக் கீழ் 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சேபாலிகா கடை அருகில் இருந்து லயன் அறைக்கு பின்னால் உள்ள வீதியை அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு உரிய ரூபா. 1,566,616.41 தொகையை ஒப்பந்தக்காரரான வெல்அதுராகொடை, கனேகம, பெல்மதுள்ள அதுராகொடை எக்சத் அவமங்கல்யதார சஹன சேவா சங்கத்திற்கு வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சிங்கப்புலிகந்த அனைக்கட்டு வீதியில் பாலத்தின் இரு புறங்களையும் அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு உரிய வேலைதிட்ட முடிவு பில்லிற்கான ரூபா. 1,244,455.99 தொகையை ஒப்பந்தக்காரரான தேவாலகொட, பாதகட, சிதமு சம்பத் கொவி சங்விதானய இற்கு வழங்குவதற்கு அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சிங்கப்புலிகந்த அனைக்கட்டு வீதியில் பாலத்தின் இரு புறங்களையும் அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு உரிய வேலைதிட்ட முடிவு பில்லிற்கான ரூபா. 1,244,455.99 தொகையை ஒப்பந்தக்காரரான தேவாலகொட, பாதகட, சிதமு சம்பத் கொவி சங்விதானய இற்கு வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. 3. திட்டா புயல் காரணமான அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்த மக்களுக்காக நலன்புரி வசதிகள் வழங்கல், வீதிகளில் காணப்பட்ட மண் திட்டுக்களை அப்புறப்படுத்தல், அபாயகரமான மரங்களை அகற்றல் போன்றவற்றிற்கான செலவு ரூபா. 188,953.03 தொகை உள்ளூராட்சி மன்ற ஆனையாளர் அலுவலகத்தில் இருந்து மீள்நிரப்பு செய்யப்பட்டதால் இந்த நிதியில் இருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும் அத்துடன் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நபர்களினால் சொந்த பணத்தில் செலவு செய்த தொகையை மீள பெற்றுக் கொடுப்பதற்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

இந்த வசதிகளை வழங்கியமைக்காக உரிய செலவுகளுக்கான உரிய பில்கள் மற்றும் கோரிக்கை கடிதம் ஒன்றை முன்வைத்து பின்னர் பரிசோதித்துப் பார்த்து அந்த பில்களை செலுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. 04. ரிடிதொல வத்த, வெலிஹித, பெல்மதுள்ள என்ற விலாசத்தில் திரு. எம்.எம். திமுத்து என்ற நபர் நாடாத்திச் செல்லும் புலொக்கல் வேலைத்தளம் வியாபார நிலையம் காரணமாக அருகில் உள்ள வீடுகளுக்கு சத்தம் பிரச்சினையாக உள்ளது. அதனால் சத்தம் தொடர்பான நிலைமைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை முன்வைக்குமாறு உரிய நிறுவனத்தின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அது முன்வைக்கப்படாமல் அயலவர்களுக்கு தொந்தரவு ஆகக்கூடிய விதத்தில் சூழல் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மேற்கொள்ளப்படும் வியாபாரத்திற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

உரிய முறையிலான சூழல் அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாமல் மேலும் இந்த வியாபாரத்தை நடாத்திச் செல்வதானால் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள்**

2025.12.29 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் கூட்ட அறிக்கை சபைக்கு முன்வைக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், 2025.12.29 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் கூட்ட அறிக்கையில் பரிந்தரைகள் 11 இல் பிரதேச சபையின் தேவைகளுக்காக வாருடாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் தொடர்பாக நியமித்த விவரங்களைக் கொண்ட பட்டியல் ஒன்றை தயாரித்து 02 கமிட்டி கூட்டங்களுக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொழிநுட்ப சேவைகள் குழு கூட்டத்தில் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. பிரதேச சபையின் தேவைகளுக்காக வாருடாந்தம் கொள்வனவு செய்யப்படும் அனைத்து பொருட்களினதும் பட்டியல் ஒன்றும் பொருட்களுக்கு செலவாகுத் தொகை தொடர்பான பட்டியல் ஒன்றும் மற்றம் அவற்றிற்கு ஏதுவான நியமித்த விவரங்களை தயாரித்து 02 கமிட்டி கூட்டங்களுக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொழிநுட்ப சேவைகள் குழு கூட்டத்தில் பரிந்துரைகள் வழங்கப்பட்டன என்று திருத்தப்படல் வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

பொருட்கள் கொள்வனவு செய்யும் போது விவரங்கள் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால் இந்த சிக்கல்களை திர்த்துக் கொள்வதற்கு கௌரவ சபையை செயற்பாட்டுக் குழுவாக நியமிப்பது உகந்தது என்ற கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மானிபுற அவர்களின் பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது. (பி.ப. 12.10)

விலைமனுகோரல் விடய உத்தியோகத்தர் பௌரவ சபைக்கு அழைத்து விவரங்கள் தொடர்பான சிக்கல் நிலமைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

செயற்பாட்டுக் குழுவை கௌரவ சபையாக கருதுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது. (பி.ப. 12.50)

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2025.11.01 ஆம் திகதியில் இருந்து 2025.11.30ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

வருமான மேம்பாட்டு அறிக்கையில் குப்பை வரி தொடர்பாக சிக்கல்கள் தோன்றியதன் காரணத்தினால் இந்த சிக்கல்களை தீர்த்தக் கொள்வதற்கு கௌரவ சபையை செயற்பாட்டுக் குழுவாக நியமிப்பது உகந்தது என்ற கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களின் பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம். புஸ்பகுமார தனசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது. (பி.ப. 12.55)

அப்பொழுது குப்பை முகாமை விடய உத்தியோகத்தர், கணக்குகள் தொடர்பான விடய உத்தியோகத்தர் ஆகியோரை பௌரவ சபைக்கு வரவழைத்து குப்பை முகாமை விடயம் தொடர்பான சிக்கல் நிலமைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

செயற்பாட்டுக் குழுவை கௌரவ சபையாக கருதுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது. (பி.ப. 01.20)

வருமான மேம்பாட்டு அறிக்கையில் குப்பை வரி தொடர்பாக 2025.12.31 ஆம் திகதிக்கு நிலுவை மீதி தொடர்பாக சிக்கல் நிலை தோன்றி செயற்பாட்டுக் குழுவாக நியமித்து பழைய குப்பை வரி அறவிடுதல் தொடர்பான சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக விடய உத்தியோகத்தர்களுக்கு முடியாமல் போனதால் வருமான மேம்பாட்டு அறிக்கையில் தொகைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என்றும் இது தொடர்பாக கணக்காய்வு சம்பந்தமான ஆலோசனைகள் விரைவாக பெற்று நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்று று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

வேறு விடங்கள்

- **பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்**

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள்**

இந்த சபை ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து எதிர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சில கட்சிகள் எல்லோரும் அல்ல பெல்மதுள்ள பிரதேச மக்களுக்கு அன்பை செலுத்தும் மனநிலை உள்ள கட்சிகள் எங்களுடன் ஒன்றுசேர்ந்து இந்த சபையை முன்னெடுத்துச் செல்ல முயற்சி செய்த போதிலும் தமக்கு அதிகாரத்தை பெற முடியாது என்று கூரியவர்கள் தமக்கு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொள்ள முடியாது போன அனைத்து சந்தர்ப்பங்களிலும் சபையில் இருந்து வெளியேரினர். அதனால் பெல்மதுள்ளவிற்கு பாரிய அசாதாரணங்கள் ஏற்பட்டன. 03 மாதங்கள் தொடர்ச்சியாக தாமதப்பட்டன. பிரதேச சபையின் நடவடிக்கைகளை மேற்கொண்டு பொது மக்களுக்கு பிரதேச சபை என்ற ரீதியில் ஆற்றவேண்டிய செயற்பாடுகளை ஆற்றுவதற்கு இயலாமல் போய் உள்ளது. கமிட்டிகள் நியமிக்கப்பட்ட போதிலும் கமிட்டிகளுக்கு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் அக் கமிட்டிகளில் இருந்தும் இராஜினாமா செய்தனர். கூட்டப்பட்ட நிறைய கமிட்டிகளுக்கு அதிகமானோர் வரவில்லை. வெளியேரிச் சென்றவர்களில் அதிகமானவர்கள் வரவில்லை. இந்த விடயம் மிகவும் கேவலமான செயல் என்பதால் இதை வன்மையாக கண்டிக்கிறேன். கௌரவ தலைவர் அவர்களே இது தொடர்பாக உள்ளூராட்சி மன்ற விவகாரங்கள் அமைச்சருக்கு தெரியப்படுத்தி சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றால் அது தொடர்பாக கருத்தில் கொள்ளுமாறும், விசேடமாக பெல்மதுள்ள பிரதேச வாழ் மக்களுக்கு இவர்கள் செய்யும் கீழ்தரமான செயல்களை வெறுப்புடன் கண்டித்து இதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள்**

புதிய வருடம் ஒன்றில் இது போல் எதிர்பார்க்கவில்லை. இந்த வருடத்தில் பிரச்சினைகள் ஏதும் இல்லாமல் நடாத்திச் செல்ல முடியும் எதிர்பார்த்ததாகவும், தொழிநுட்ப சேவைகள் கமிட்டியின் முன்னால் தலைவர் என்ற ரீதியில் மற்றும் இந்த வருடத்திற்காத தலைவர் என்ற ரீதியில் தான் கமிட்டியை கூட்டுவதற்கு இணைடு நாட்களுக்கு முன் வட்ஸ்அப் தளத்தில் வெளியிடுவதாகவும் அன்றைய தினம் கமிட்டிக்கு வருமாறும் கமிட்டி உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்வதாகவும், எதிர்கட்சியினல் வரவு செலவு திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சபையில் இருந்து வெளியேரினர். அதற்கு தனது வருத்தத்தை தெரிவிப்பதாகவும், ஏனென்றால் செய்ய முடியாது என்று சொல்வதை விட வேலை செய்ய முடியுமா இல்லையா என்று ஒரு வருட காலம் வழங்க வேண்டும் என்ற கொள்கையில் தான் இருப்பதாகவும் தெரிவித்தார்.

- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 01.35 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள